1981 மே 6]

நெருப்பூர் கிராமத்திலுள்ள கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண். 997—திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் வட்டம் நெருப்பூர் கிராமத்தில் உள்ள கூட்டுறவு சங்கம் செயல்படாமல் இருக்கக் காரணம் என்ன ?

(ஆ) அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருப்பூர் விவசாய சேவா கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகக் குழுவில் உள்ளவர்களே, கடன் தவறிய பாக்கிதாரரர்களாக இருக்கிற காரணத்தாலும், மற்றும் பல உறுப்பினர்கள் நிலுவைக் கடனிலே இருக்கிற காரணத்தாலும் கடன் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தக்க நடவடி.க்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலைமை சீராக ஆகும் என்று அரசு நம்புகிறது.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வங்கி ஏறத்தாழ 10 ஆண்டுகள் காலமாக செயல்படாமல் இருந்து வருகிறது. தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள் கூட, அந்த ஊருக்கு 15 மைல், 20 மைல் தள்ளி இருக்கிற காரணத்தால் அங்குள்ள மக்கள் கடன் வசதி பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். மத்திய கூட்டுறவுச் சங்கம் சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? தனி நபர்களின் ஆதிக்கம் அங்கு அதிகமாக இருப்பதால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்பதும் அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இதனை போக்க தக்க நடவடிக்கையை எடுத்து, அங்குள்ள மக்கள் மீண்டும் கடன் வசதி பெறும் வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட சங்கத்தைப் பொருத்தவரைக்கும் விவசாயிகளுக்கு கடன் தரக்கூடிய தகுதியை அந்தச் சங்கம் இழந்திருப்பதற்கே காரணம், கொடுத்த கடனை அந்தச் சங்கம் திருப்பிப் பெறாமல் இருப்பதுதான். அந்தச் சங்கத்தின் நிர்வாக குழுவின் உறுப்பினர்களாக இருப்பவர்களும் கூட வங்கியில் வாங்கிய கடனை கட்டாத நிலுவைதாரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிர்வாகக் குழு உறுப்பினர்களும், கடன் வாங்கிய மற்ற விவசாயிகளும், வாங்கிய கடனை திருப்பிக் கட்டுகிறபோதுதான், அந்த வங்கி மீண்டும் கடனை தரக்கூடிய தகுதியைப் பெறும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. தீர்த்தராமன் : அந்தச் சங்க நிர்வாக பொறுப்பினை ஏற்றிருக்கிறவர்கள் அதிகமாகக் கடனைப் பெற்று அந்தச் சங்கம் செயல்படாத அளவிற்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களால் அந்தப் பகுதி மக்கள் கடன்கள் பெறுகிற வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுப்பதோடு கூட ஏதாவது சலுகைகள் அளித்தாவது அந்தப் பகுதி மக்கள் கடன்கள் பெறும் வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வேலியே பயிரை மேய்கிறது என்ற நிலை இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் தான் கூட்டுறவு சட்ட விதி 28 (1)-ன்கீழ் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீதும் அங்குள்ள அதன் உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கைகள் எடுக்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது, நோட்டீஸ் அனுப்பப் பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து எக்ஸ்ப்ளனேஷன் பெற்றவுடன் அவர்கள் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

திரு. கா. இரா. சின்னராசு : அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏதாவது பணம் கையாடல் செய்து பினாமி லோன்கள் போட்டு எடுத்திருக்கிறார்களா ? அந்தத் தலைவர் மீது என்னென்ன வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? மேலும் வசூலிக்கப்படாமல் இருக்கும் அந்தக் கடன்களை வசூலிப்பதற்கு அரசு தரப்பில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்கள் பினாமி கடன்கள் எடுத்திருக்கிறார்களா என்பது பற்றிய தகவல் இல்லை. இருக்கிற பிரச்சினையெல்லாம், கூட்டுறவுச்சங்கம் விவசாயிகளுக்குக் கொடுத்த கடன்களை வசூலிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. அந்தச் சங்கத் தலைவர், உறுப்பினர்கள் எடுத்து கடன்களைக் கட்டாமல் அந்தச் சங்கத்தை செயலற்ற வகையில் வைத்திருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை. அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாரனேயில் விவசாயக் கிடங்கு கட்டும் திட்டம்.

*வினா எண். 998—திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிச்சநாயக்கன்பட்டி கூட்டுறவு விவசாய நாணயச்சங்கம் உள்ள மாரனேயில் விவசாயக் கிட்டங்கி கட்ட ஆய்வு செய்ததா ?

(ஆ) அது இதுவரை கட்டப்படாதது ஏன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கிச்சநாயக்கன்பட்டி கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் கிடங்கு கட்டுவதற்கான அடிமனை இதுவரை வாங்காத காரணத்தினால் அங்கு கிடங்கு கட்டப்படவில்லை.